தினமணி
27-07-2024

# பொருளாதார ஆய்வறிக்கை-2023-24: ஒரு கண்ணோட்டம்
# -முனைவர் டி கே ஜயராமன்

2023-24ஆம் ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கை நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் நாளில் (ஜூலை 22) சமர்ப்பிக்கப்பட்டது. இந்த ஆய்வறிக்கை பொதுவெளியில் எவ்வித சலசலப்பையும் ஏற்படுத்தவில்லை. ஆனால், இந்திய பொருளாதாரத்தின் உண்மை நிலையை படம்பிடித்துக் காட்டும் முக்கியத்துவம்வாய்ந்த ஆவணம் என்பதை பலரும் அறிந்திருக்க வேண்டும். பொருளாதார வளர்ச்சி குறித்த அதன் கணிப்புகள் சிந்திக்கத் தகுந்தவை..

இந்த ஆய்வறிக்கையின்படி, 2024-25ஆம் ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சியின் மதிப்பீட்டு விகிதம் 6.5% முதல் 7.0% என்ற வரம்பில் உள்ளது, இது ரிசர்வ் வங்கியின் மதிப்பீட்டான 7.2%ஐ விட குறைவாகவும், ஆசிய வளர்ச்சி வங்கி, ஐ.எம்.எஃப். மற்றும் உலக வங்கியின் மதிப்பீடுகளைவிட குறைவாகவும் உள்ளது.

கடந்த ஆண்டு இந்தியா 8.2% வளர்ச்சி அடைந்தது என்று பொருளாதார ஆய்வறிக்கை தற்புகழ்ச்சியில் ஈடுபடவில்லை. மாறாக, பொருளாதார சவால்களை அடையாளம் காட்டுகிறது. கணிக்க முடியாத வானிலை

முறைகள், புவிசார் அரசியல் மோதல்கள் மற்றும் போர்கள், வழக்கமான வர்த்தகத்தை வெகுவாக பாதிக்கும் என்று ஆய்வறிக்கை தெரிவிக்கிறது

*தனியார் துறை:*

பொருளாதார ஆய்வறிக்கையில், தனியார் துறைக்கு மிக முக்கியமான பரிந்துரைகள் உள்ளன. 2021இல் கோவிட் பெருந்தொற்று முடிவடைந்தது முதல் விலைவாசி உயர்வைப் பயன்படுத்தி, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்கும் நிறுவனங்கள் மற்றும் தொழில்கள் மிகப்பெரிய லாபத்தை ஈட்டியுள்ளன. அந்த நிறுவனங்கள், ஊழியர்களின் உழைப்புக்கான ஊதியத்தை விரிவுப்படுத்தவில்லை. எனவே, இப்போது ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்கிறது ஆய்வறிக்கை.

இது தொழிலாளர்களின் நுகர்வு அளவை உயர்த்துவதுடன், சேமிப்பு அளவையும் உயர்த்தும். சேமிப்புகள் வங்கிகளில் வைப்புத்தொகையாக நுழையும். தற்போது, நடுத்தர வருமானம் பெறும் வகுப்பினர் தங்கள் சேமிப்பை மியூச்சுவல் ஃபண்டுகளில் அதிகளவில் முதலீடு செய்து வருகின்றனர். அவ்வாறு செய்வதன் மூலம், வங்கிகளின் வைப்பு குறைந்து வருகிறது. ஆகவே, நடுத்தர வருமானம் மற்றும் ஊதியம் பெறுபவர்களுக்கு கடன் வழங்க முடியாமல், பணப்பற்றாக்குறையை வங்கிகள் சந்தித்து வருகின்றன.

*வேலை வாய்ப்புகள்:*

வேலைவாய்ப்பில் ஆய்வறிக்கை முழுகவனம் செலுத்தியுள்ளது. வேளாண்மை மற்றும் அதன் சார்பு செயல்பாடுகள், வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு சாத்தியமான துறைகளாக சுட்டிக்காட்டப்படுகின்றன. இந்தியாவின் தொழிலாளர் எண்ணிக்கை கிட்டத்தட்ட 565 மில்லியன். இதில், 45 சதவீதம் பேர் விவசாயத்திலும், 11.4 சதவீதம் பேர் உற்பத்தியிலும், 28.9 சதவீதம் பேர் சேவையிலும், 13.0 சதவீதம் பேர் கட்டுமானத்திலும் ஈடுபட்டுள்ளனர். சேவைகள் முக்கிய வேலைகளை

உருவாக்குபவை. அரசாங்க உள்கட்டமைப்பு முயற்சிகளால் கட்டுமானத் துறையின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. விவசாயத் துறையில் இருந்து மாறுபவர்களுக்கு சிறந்த வேலை வாய்ப்புகளை கட்டுமானத்தொழில் உருவாக்கி வருவதை அவசியத்தை ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

உள்நாட்டு உற்பத்தித் துறையின் வேலைவாய்ப்பு, மோசமான கடன்களால் தேக்க நிலையில் இருந்தது, 2021-22இல் இருந்து மீண்டு வருவதற்கான அறிகுறிகளைக் ஆய்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. இந்தியாவில் தொழிலாளர் சந்தை குறிகாட்டிகள் கடந்த 6 ஆண்டுகளில் மேம்பட்டுள்ளன, 2022-23இல் வேலையின்மை விகிதம் 3.2 சதவீதமாக குறைந்துள்ளது. இளைஞர்கள் மற்றும் பெண் பணியாளர்களின் பங்கேற்பை அதிகரிப்பது, மக்கள்தொகை மற்றும் பாலின ஈவுத்தொகையைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது. ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அமைப்பின்கீழ் நிகர ஊதியத்தை சேர்ப்பது, கடந்த 5 ஆண்டுகளில் இரு மடங்கிற்கும் அதிகமாக உள்ளது, இது முறையான வேலைவாய்ப்பில் ஆரோக்கியமான வளர்ச்சியைக் குறிக்கிறது.

2030ஆம் ஆண்டு வரை இந்தியப் பொருளாதாரம் ஆண்டுதோறும் 7.85 மில்லியன் விவசாயம் அல்லாத வேலைகளை உருவாக்க வேண்டும் என்று ஆய்வறிக்கை வலியுறுத்துகிறது. திறன்மேம்பாட்டு முயற்சிகள் முன்னேற்றம் அடைந்தாலும்,, இளம் பணியாளர்களில் 4.4 சதவீதம் பேர் மட்டுமே முறையாகத் திறன் பெற்றுள்ளனர், இது முன்னேற்றத்திற்கான இடத்தைக் குறிக்கிறது. நில பயன்பாடு மற்றும் பெண்களின் வேலைவாய்ப்பு தொடர்பான மாநில அளவிலான சட்டங்கள் போன்ற ஒழுங்குமுறை சீர்திருத்தங்கள், வேலை உருவாக்கத்திற்கான வாய்ப்புகளாக அடையாளம் காணப்படுகின்றன. வளர்ந்து வரும் மக்கள்தொகையின் வேலைவாய்ப்பு தேவைகளை பூர்த்தி செய்ய, ஆண்டுதோறும் 7.85 மில்லியன் விவசாயம் அல்லாத வேலைகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை பொருளாதார ஆய்வறிக்கை வலியுறுத்துகிறது.

மேலும், வேளாண் செயல்பாடுகள், மேலாண்மை பொருளாதாரம் போன்றவை நிலையான வேலைகளை உருவாக்குவதற்கான முக்கிய துறைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

*பொருளாதார ஆய்வறிக்கை பரிந்துரைகள்:*

(i) விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் முக்கியமானது, சிறு, குறு நிலங்களை பெருநிலமாக ஒருங்கிணைக்க வேண்டும்.

(ii) உற்பத்தியை விற்பனை செய்வதற்கான சந்தை அறிவாற்றலை உற்பத்தியாளர்கள் மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

(iii) புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கான இடத்தை பெறுவதற்கு, நில பயன்பாடு குறித்த கடுமையான சட்டங்களை ரத்து செய்ய வேண்டும். புதிய தொழிற்சாலைகள், வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருமானத்தை உயர்த்தும்.

(iv) கிராமப்புறங்களில் தொழில்திறன் இடைவெளிகளைக் குறைக்க வேண்டும்.

(v) ஆண்களின் ஆதிக்கத்தில் இருக்கும் தொழில்களில் கட்டுப்பாட்டை தளர்த்தி, பெண்களை வேலை செய்ய அனுமதிக்க வேண்டும்.

பொருளாதார ஆய்வறிக்கையில் உள்ள யோசனைகள் மற்றும் பரிந்துரைகள் 2024-25ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் தயாரிப்பதற்காக அல்ல. மாறாக, 2023-24ஆம் நிதியாண்டில் பொருளாதாரச் செயல்பாடுகளின் மதிப்பீடு செய்து, அதனடிப்படையில் எதிர்காலத்தில் கொள்கைகளை வகுக்கும்போது அரசு கவனத்தில் கொள்ள வேண்டிய வழிகாட்டிகளைத்தான் பொருளாதார ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

---

டி கே ஜயராமன் ,ஆசிய வளர்ச்சி வங்கியின் முன்னாள் மூத்த பொருளாதார நிபுணர். www.tkjayaraman.com